இலங்கை திறந்த பல்கலைக்கழகம்

மானுடவியல் மற்றும் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்

சட்டக்கற்கைகள் திணைக்களம்

சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம்

மட்டம் - 06

**LLU6717/LWU4325–** சர்வதேச மனித உரிமைகள் சட்டம்

இறுதிப் பரீட்சை - 2023/2024

காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்

திகதி : 22.05.2025 நேரம்: பி.ப 01.30 - பி.ப 04.30

மொத்த வினாக்களின் எண்ணிக்கை எட்டு (08).
ஐந்து (05) வினாவிற்கு மாத்திரம் விடையளிக்குக.
தெளிவற்ற கையெழுத்திற்கு புள்ளிகள் குறைக்கப்படும்.

1. ஐக்கிய நாடுகள் சபையின் நிறுவுதலானது சர்வதேச மனித உரிமைகள் சட்டத்தின் அபிவிருத்திக்கு அத்தியவசியமானது ஆகும். பொருத்தனை ஏற்பாடுகள் என்றின் அபிவிருத்தி ஆனது, இச்சட்டப்பரப்பின் மேம்பாட்டிற்கு ஐக்கிய நாடுகள் சபை பங்காற்றியுள்ள ஒரு முறை ஆகும்.

   இக்கூற்றுடன் நீர் இணங்குகிறீரா? உமது விடையைத் தகுந்த உதாரணங்களை அளித்து நியாயப்படுத்துக.

   **( 20 புள்ளிகள்)**

2. கீழுள்ள செய்தியானது 2017ஆம் ஆண்டில் இடம்பெற்ற ஆசிரியர்களுக்கான நிகழ்வு ஒன்றில் இலங்கையின் முன்னாள் சனாதிபதி ஒருவரால் வழங்கப்பட்ட உரை ஒன்றில் இருந்து பெறப்பட்டது ஆகும். இதனை வாசித்து மனித உரிமைகளின் சர்வதேச பிரயோகம் மற்றும் கலாசார சார்புடைமை மீதான விவாதத்தினை தொடர்புறுத்தி இவ்உரையில் உள்ள வாதங்களை நுணுக்கமாக ஆராய்க.

   [...] நான் தொப்பாவெவ மகாவித்தியாலயத்தில் கல்வி கற்கும் போது ஒரு நாள் எனது வகுப்பு அமைதியற்று ஆராவாரத்துடன் இருந்தது. இதனை அவதானித்த அதிபர் என்னை சமிக்ஜையின் மூலம் அழைத்து பிரம்பால் அது உடையும் வரை அடித்தார்... எனது தாயார் ஒரு ஆசிரியராகவும் எனது தந்தை கிராமத்தலைவராக இருந்த போதும் அதிபர் என்னை தண்டித்ததை நான் அவர்களிடம் கூறவில்லை. நான் பிரம்பால் அடி வாங்கியதை அவர்களிடம் கூறியிருந்தால் அவர்கள் நான் ஏதேனும் தவறிழைத்ததன் காரணமாகவே அவ்வாறு தண்டிக்கப்பட்டிருப்பேன் என கூறியிருப்பர்.

   இன்று நடப்பவற்றைக் கண்டு நான் பிரமிப்படைகிறேன். மனித உரிமைகள், அடிப்படை உரிமைகள், சுதந்திரம் மற்றும் சனநாயகம் என்பன நல்ல விடயங்கள். இவை சமூகத்தை ஆக்குவதற்காக அளிக்கப்பட்டவை அன்றி அதனை அமைதியற்றதாக்குவதற்கு அல்ல... ஒரு பாடசாலையில் உள்ள ஆசிரியர் மாணவரின் காதை திருகும் போது அல்லது நிர்வாகிகள் தலையில் குட்டும் போது அல்லது அறையும் போது, அந்த ஆசிரியர் பொலிசிற்கு எடுத்து செல்லப்பட்டு அவரிற்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படுகிறது. பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களின் பெற்றோர் மனித உரிமைகள் மற்றும் சுதந்திரம் என்பனவற்றின் உண்மையான அர்த்தத்தை அறிய வேண்டும்"

   **(20 புள்ளிகள்)**

3. 'சர்வதேச மனித உரிமைகளில் பெண்களின் உரிமைகள் மற்றும் இலங்கையில் அவற்றின் பிரயோகம்' எனும் தலைப்பில் உமது பாடசாலை பழைய மாணவர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பெண்கள் தினத்திற்காக உரை ஒன்றை வழங்குமாறு நீர் அழைக்கப்பட்டுள்ளீர். ஏற்பாட்டாளர்கள் இத்தலைப்பு தொடர்பில் ஒரு நுணுக்கமான ஆராய்வை எதிர்பார்க்கின்றனர் உமது உரையின் கட்டமைப்பை தயாரிக்குக. உமது உரை பொருத்தமான சட்ட உறுப்புரைகளையும், தொடர்புடையதாயின் வழக்குத்தீர்ப்புக்களையும் உள்ளடக்க வேண்டும்.

**(20 புள்ளிகள்)**

4. கக்டஸ் நாட்டின் இராணுவ தலைமை அதிகாரியாக ஜெனரல் புருட்டஸ் சேவை ஆற்றினார். நாட்டின் அரசாங்கத்திற்கு எதிராக போராட்டம் ஒன்றை ஆரம்பித்த போராளிகளின் குழுவொன்றிற்கு எதிராக இடம்பெற்ற சிவில் யுத்தத்தில் இராணுவத்திற்கு இவர் தலைமை தாங்கினார். யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் இராணுவத்தாக்குதல்களின் உச்ச நிலை காரணமாக x எனும் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான குடிமக்கள் இறந்ததுடன், வைத்தியசாலைகள் போன்ற முக்கியமான கட்டமைப்புகள் பாதிக்கப்பட்டன. மேலும் இராணுவத்தால் ஆதரிக்கப்பட்ட துணை இராணுவம் போராளிகளை விசாரிப்பதற்கான தடுப்பு முகாம்களை பேணியதுடன் அம்முகாம்களில் சித்திரவதை இழைக்கப்பட்டதாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. யுத்தத்தின் பின்னர் x சமூகத்தின் உரிமைகளுக்கான சட்டத்தரணிகள் அச்சமூகத்திற்கெதிராக இழைக்கப்பட்ட குற்றங்களை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் கீழ் நோக்குகின்றனர்.

(அ) சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு வழக்குகள் எவ்வாறு முன்வைக்கப்படுகின்றன என்றும் சர்வதேச குற்றவியல் நீதிமன்ற முறைமையின் கீழ் புருட்டஸ் மீது எவ்வாறு வழக்குத் தொடரப்படலாம் என்றும் ஆராய்க. சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கான உரோம் சட்டத்தின் ஒரு திறம் கக்டஸ் நாடு அல்ல என கருதுக.

**(10 புள்ளிகள்)**

(ஆ) ஜெனரல் புருட்டஸ் மீது வழக்குத் தொடரப்பட எடுத்து நோக்கப்படவேண்டிய வேறு ஏதேனும் பதிலீட்டு சட்ட அமைப்புகள் காணப்படுகின்றனவா? சர்வதேச குற்றவியல் சட்டத்தின் அபிவிருத்தியை தொடர்புறுத்தி வரலாற்று உதாரணங்களை எடுத்துக்காட்டி விளக்குக.

**(10 புள்ளிகள்)**

5. (அ) ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகளிற்கான ஆணைக்குழு (UNHRC), மனித உரிமைகளிற்கான ஆணைக்குழு (HRC) மற்றும் மனித உரிமைக்கான ஐக்கிய நாடுகளின் ஆணையகம் முதலானவற்றிற்கு இடையான வேறுபாடுகளை விளக்குக. இவற்றின் செயற்பாடுகளில் உள்ள ஒற்றுமை வேற்றுமைகளைக் குறிப்பிடுக.

**(10 புள்ளிகள்)**

(ஆ) பொருத்தணைசார் ஏற்பாடுகள் எவ்வாறு அவற்றின் திறங்களது (நாடுகளது) ஏற்று நடத்தலை மேற்பார்வை செய்கிறது என விளக்குக. மேற்பார்வை செய்தல் தொடர்பிலான நடைமுறையில் உள்ள சட்ட ஏற்பாடுகள் மனித உரிமைகளின் செயற்திறனுள்ள மேம்பாட்டிற்கும் பாதுகாப்பிற்கும் போதுமானவை என நீர் கருதுகிறீரா? உமது விடைக்கான காரணங்களை தருக.

**(10 புள்ளிகள்)**

00012

6. சிறுவர் உரிமைகள் மீதான சமவாயம் (CRC) ஆனது சிறுவர் உரிமைகள் தொடர்பான மேம்பாடு மற்றும் பாதுகாப்பு என்பனவற்றுக்கான ஒரு முழுமையான சட்ட ஏற்பாட்டை வழங்குகிறது. (CRC)இன் கீழ் இலங்கைக்கு உள்ள கடப்பாடுகள் எந்தளவு தூரம் அடையப்பட்டுள்ளன என நுணுக்கமாக ஆராய்க. உமது விடை, சட்ட ஏற்பாடுகளை ஆக்குதல் மற்றும் நடைமுறைச் செயற்படுத்துகை தொடர்பில் கல்வி, சிறுவர் தொழில், துஷ்பிரயோகத்திலிருந்து பாதுகாப்பு முதலான ஏதேனும் குறைந்தபட்சம் இரண்டு (02) பரப்புக்களை கருத்திற் கொள்ள வேண்டும்.

**(20 புள்ளிகள்)**

7. ‘[...] மதமும் மனித உரிமைகள் இரண்டும் தனித்துவமானவை ஆகும். சமுதாயம் மதச்சார்புடையதாகுதல் அதிகரிக்கும் போது, மனித உரிமைகளின் பாதுகாப்பிற்கான பரப்பு குறைவடைகிறது’

இக்கூற்றுடன் நீர் இணங்குகிறீரா? உமது வாதங்களை தகுந்த வரலாற்று மற்றும் சமகால உதாரணங்களுடன் முன்வைக்குக.

**(20 புள்ளிகள்)**

8. பின்வருவன மீது சிறுகுறிப்புக்கள் எழுதுக.

(அ) ஐக்கியநாடுகள் சபையின் தற்கால நியாயசபைகள் (UN ad hos tribunals)

(ஆ) பொருளாதார, சமூக மற்றும் கலாசார உரிமைகள் (Economic, social and cultural rights)

(இ) தனிநபர் முறையீட்டு நடபடிமுறைகள் (Individual complaint procedures)

(ஈ) உயிர் வாழ்வதற்கான உரிமை (Right to life)

**(5x4=20 புள்ளிகள்)**

- முழுப்பதிப்புரிமை பெற்றது -